தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-1-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலையில் அறிவு மேலாண்மை மற்றும் திறன் மேம்பாட்டுக்கான மூன்று நாள் கருத்தரங்கம்**

வேளாண் கல்வியில் மாறுதலுக்காக அறிவு மேலாண்மை மற்றும் திறன் மேம்பாட்டுதலின் மூலம் வேளாண்மையில் மிகவும் பயனுள்ள புதுமையான முறைகள் பற்றிய மூன்று நாள் பயிற்சியினை புதுதில்லி இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் துணைப் பொது இயக்குநர் (கல்வி) முனைவர். நாகேந்திர சிங் ரத்தோர் அவர்கள், கோவை தமிழ்நாடு வேளாண்மைப பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர். என்.குமார் அவர்களின் முன்னிலையில் ஜனவரி 22, 2019 அன்று துவக்கி வைத்தார்.

இப்பயிற்சியில் பாங்காங் ஆசிய- பசிபிக் அசோசியேசன் ஆப் அகரிகல்சுரல் ரிசர்ச் இன்ஸ்டியுஷன் (APAARI) இத்தாலியின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் மற்றும் கனடா வேளாண்மை மற்றும் உயிர் அறிவியலுக்கான உயர்கல்வியியல் கழகத்தின் உலகளாவிய கூட்டமைப்புகளில் உள்ள அறிவு மேலாண்மை மற்றும் விரிவாக்க வல்லுநர்கள், 40 பங்கேற்பாளர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள், மாணவர்கள் துவக்க விழாவில் பங்கேற்றனர். இப்பயிற்சியிக்கு பேராசிரியர் முனைவர். உ.சிவக்குமார் அவர்கள் ஒருங்inைப்பாளராக இருந்து வழிநடத்ததினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர். நீ. குமார் அவர்கள் வேளாண் கல்வியில் அறிவு மேலாண்மை மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி கொணரும் மாறுதல்களின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார்.

முனைவர். நரேந்திர சிங் ரத்தோர் அவர்கள் வேளாண் ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத்தின் மூலம் உணவின் தேவை மற்றும் வழங்கலில் உள்ள குறைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மார்டினா ஸ்பிஷியாகோவா, (பாங்காங் APAARI) அவர்கள் கருத்துரையில் அறிவு மேலாண்மையின் மூலம் வேளாண்மையில் புதுமையான சிந்தனைகள் மற்றும் வேளாண்மையில் இப்பயிற்சிக்கான முக்கியத்துவங்கள் பற்றி கூறினார்.

இத்தாலி உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் திறன் முன்னேற்றம் மற்றும் கண்காணிப்பு நிபுணர் மனுலா ப்புகேரேலி அவர்கள் தன்னுடைய சிறப்புரையில் உணவு உற்பத்தியில் இருக்கும் சாவல்கள் மற்றும் புதுமையான விஞ்ஞான ரீதியில் அதற்குரிய தீர்வுகளை திறன் மேம்பாட்டின் மூலம் எவ்வாறு காணலாம் என்பது பற்றி உரையாற்றினார்.

GCHERA, கனடாவின் முனைவர் ஜான். ஜே. கேனலி அவர்கள் தங்களது சிறப்புரையில் வேளாண்மையில் உள்ள சவால்களை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பதனை இப்பயிற்சியில் கற்கலாம் என்று கூறினார். முனைவர்.ஜான்.எஸ்.கென்னடி (முதன்மையர்) அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்